**சுருக்கம்**

மாநில நிதிப் பகிர்வு – மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மாநில நிதிப் பகிர்வு – 2008–09 –ம் ஆண்டிற்கு பேரூராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் மாநில நிதிப் பகிர்வுத் தொகை ரூ.69,16,55,714/– பிப்ரவரி, 2009 மற்றும் மார்ச், 2009 மாதங்களுக்கு – நிதி விடுவித்து – ஆணையிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

அரசாணை(ப) எண்.24 நாள் 29.01.2009

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை எண்.199, நிதி (FCIV) துறை, நாள் 25.5.2007.
2. அரசாணை (நிலை)எண். 304, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 18.07.2008
3. அரசாணை எண்.359 (ம) 360 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் .20.8.2008
4. பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களில் ந.க.எண்.9400/08/ஈ1, நாள் 09.01.2009.

------

**ஆணை:**

இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி மாநில நிதிப் பகிர்வுத் தொகைகள் 2002–2007 வரையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசால் பகிர்ந்து அளிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது அரசு எடுத்த முடிவுகளின் அடிப்படையில், 2007–08ஆம் ஆண்டிலிருந்து மாநில நிதிப் பகிர்வுத் தொகைகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதன்படி, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வு பற்றிய அத்தியாயத்தில் உள்ள பரிந்துரைகளின் மீது அரசால் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணை மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாநில நிதிப் பகிர்வு மானியமாக பேரூராட்சிகளுக்கு விடுவிக்க 2008–09–ம் ஆண்டிற்கு ரூ.322,17,95,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு பேரூராட்சிக்கும் குறைந்தபட்ச மானியமாக ரூ.10.00 இலட்சம் வீதம் ரூ. 56.10 கோடி மற்றும் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு ரூ.24.00 கோடி ஒதுக்கியது போக எஞ்சிய தொகையில் மக்கள் தொகை அடிப்படையில் மாநில நிதிப் பகிர்வு தொகை ரூ.69,16,55,714/–ஐ பெற்று 561 பேரூராட்சிகளுக்கும் பிப்ரவரி, 2009 மற்றும் மார்ச், 2009 வரையில் விடுவித்திட, பேரூராட்சிகளின் ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலும், மேற்காணும் மாநில நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து பேரூராட்சியால் செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவைகள், மின்கட்டண நிலுவைகள், ஓய்வு பெற்ற பேரூராட்சிகள் பணியாளர்களுக்கு ஓய்வூதிய பயன்கள், பங்குத் தொகை மற்றும் டுபிட்கோ நிறுவனம் மூலம் பெறப்பட்ட கடன், வட்டித் தொகை ஆகியவைகளை மாநில நிதி பகிர்வு தொகையில் பிடித்தம் செய்து உரிய தலைப்பில் செலுத்திட பேரூராட்சிகளின் ஆணையருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடவும் அரசினைக் கோரியுள்ளார்.

4. மேலே பத்தி 2 மற்றும் 3–ல் உள்ள பேரூராட்சிகளின் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து மாநில நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து மக்கள் தொகை அடிப்படையில் பிப்ரவரி, 2009 மற்றும் மார்ச், 2009 மாதங்களுக்கு பேரூராட்சிகளுக்கு வழங்க வேண்டிய ரூ.69,16,55,714/–ஐ (ரூபாய் அறுபத்தொன்பது கோடி பதினாறு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து எழுநூற்று பதினான்கு மட்டும்) விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேற்காணும் மாநில நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து பேரூராட்சிகளால் செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவைகள், மின்கட்டண நிலுவைகள், ஓய்வு பெற்ற பேரூராட்சிகள் பணியாளர்களுக்கு ஓய்வூதிய பயன்கள் பங்குத் தொகை மற்றும் டுபிட்கோ நிறுவனம் மூலம் பெறப்பட்ட கடன் , வட்டித் தொகை ஆகியவைகளை மாநில நிதி பகிர்வு தொகையில் பிடித்தம் செய்திட அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஓய்வுபெற்ற பேரூராட்சி பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குவதற்காக உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை அந்தந்த பேரூராட்சியின் மாநில நிதிப் பகிர்வு மான்யத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

6. மேலும், பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையை சென்னை (வடக்கு) சம்பளக் கணக்கு அலுவலகத்திலிருந்து பெற்று 561 பேரூராட்சிகளுக்கும் வழங்குவதற்கும் பத்தி 5–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கடன்கள் மற்றும் இதர இனங்களுக்கான தொகைகளை பிடித்தம் செய்து உரிய துறைக்கு செலுத்துவதற்கும் பேரூராட்சிகளின் ஆணையருக்கு அதிகாரம் அளித்தும் ஆணையிடப்படுகிறது.

7. மேலும், இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட

வேண்டும்.

> “3604.00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் – 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி –1 – திட்டத்தில் சேராதது – AA – மாநில நிதி குழுவின் பரிந்துரையின்படி பேரூராட்சிகளுக்கு மானியங்கள் – பேரூராட்சி ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ளவை – 09 உதவி மான்யங்கள் – 02 மூலதனச் செலவுக்கான மான்யங்கள் ”
>
> **( DPC 3604 00 193 AA 0927)**

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.20/JS(JV)/09 நாள் 29/1/2009–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை–1.
மாநில கணக்காயர், சென்னை– 18.
**நகல்**
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் / நிதி IV ) துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உதிரி/நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்